பிடர் பிக்சர்ஸ் தயாரித்த

# கைதி



டைரக்ஷன்: S. பாலசந்தர்

புஸ்தக வியாபாரம், 9.A,

விலை 15 காசு

# "கைதி" கதைச் சுருக்கம்.

விஜயன் .... இளம் வாலிபன் .... படித்த பட்டதாரி .... பணமில்லா ஏழை....பணப்பிரவாகம் பெருக்கெடுத்தோடும் பட்டணத்து பந்தய ரேஸ் கோர்ஸில், நோக்கமின்றி ஒரு நாள் சுற்றி அலைந்துகொண்டிருந்தான். விதிப்பயனால் கருணாகரர் என்ற ஒரு காருண்ய ஜீவனை கத்தியால் கொலை செய்ததாக, அன்று, அங்கு கையும் கத்தியுமாக கைது செய்யப்பட்டான்!

நீதி மன்றத்தில் நிர்தாட்சண்யமாக ஆயுள் தண்டனை அளிக்கப்படுகிறது, அவனுக்கு! "கடவுளே! நானா கொலையாளி?" என்று கதறிக்கொண்டு, காராக் கிரகம் சென்றான்!

"கல் தூக்கி, செக்கிழுத்து, மண் வெட்டி, மரம் பிளந்து, கைநோக, கால்நோக வேலைசெய்கிறேனே! எவ்வளவு நாளைக்குத் தான் இதை சகிப்பது? இனி முடியாது! இதை தவிர்ப்பது! அல்லது இறப்பது! வாழ்வதா....மாள்வதா?" என்ற சிந்தனைப் போரில் சிக்குண்டான்! தான் சந்தேகிக்கும் உண்மைக் கொலையாளியைக் கண்டு பிடிக்க தீர்மானித்தான் ... தந்திரமாக தப்பிச் சென்றான் சிறையினின்று.

தீர விசாரணை நடந்ததின் தீர்ப்பென்ன? கமலாவின் கதி யென்ன....? விஜயன் விதி யென்ன....? கொலையாளி யார்....? விஜயனா....? விஜய சாரதியா...? கமலாவின் காதல் ரேவதியின் தியாகம்....வக்கில் ராமனின் வாதம்....இவைகள் மத்தியில் நியாயத்தின் தீர்ப்பென்ன.... என்பதை வெள்ளி திரை விளக்கும்.

# "கைதி" பாட்டுகள்.

பாட்டு 1]

[கைதிகள் கோரஸ்

கொடுமை பிறந்து வளருமிடம் சிறைக் கூடமே
மனிதனின் மடமை தீரவே மனதை மாற்றிடும் கூடமே
கலைக் கூடமே

கடுமையான தண்டனையிலே காட்டு விலங்காகியே
கல்லுடைத்து செக்கிழுத்து உள்ளம் நொந்து மாளவே... (கொ)

மனைவி மக்கள் தம்மையே பிரிந்து வாழும் சோகமே
மாறிடாமல் துன்பக் கண்ணீர் சோர வாழ்நாள் தீரவே... (கொ)

ஏழைக் கிரங்காது பிறர் துயர் எண்ணியும் பாராது
ஆளுக்கொரு நீதிபேசும் அறிவிலா சமூகம்
நம்மைத் திருடனென்று இகழும்—வீணிலே
சிறையில் தள்ளி மகிழும்...
(கொ)

பாட்டு 2]

[வண்டிக்காரன்

பொழுது விடியப் போயிச் கசரணும் வைக்கல வித்து
பொழைக்கும் வழியைப் பாத்து தீரணும்
பழுதுபட்ட லாடத்தை மாத்தி புதுசு ரெண்டு
பணத்தைக் கொடுத்துக் கட்டிப் போடுரேன் ... ...

மானம் பாத்த சீமையாச்சுதே—மழையில்லாமே
வயலும் வரப்பும் வறண்டு போச்சுதே
தான தருமம் செய்த நாட்டிலே—குடிக்கக் கூட
தண்ணியில்லா நிலமையாச்சுதே ... ...

உழவினாலே பிழையில்லாம குறையைப் போக்கணும்—ரேஷன்
குறையைப் போக்கணும்—இனி மழையில்லாம விளைவுண்டாக
வழியைப் பார்க்கணும்—புது வழியைப் பார்க்கணும்.

பருத்தி விளையும் சீமையிலே துணிக்குப் பஞ்சமா?
பரந்து கிடக்கும் பூமியிருக்க உணவுப் பஞ்சமா?
படிச்சுப்புட்டு வேலையில்லாக் கூட்டம் கொஞ்சமா—அவங்க
பாடு பட்டா நம்மை எந்த நாடும் மிஞ்சுமா?

தேர்தலுக்கு நாளும் வந்தாச்சி—சட்டசபை
தேர்தலுக்கு நாளும் வந்தாச்சி—ஓட்டுக்காக
தெருத் தெருவா பிரசங்கமாச்சி—நாம்ப
யாருக்குத்தான் போடறதுண்ணு—புரியாம
அல்லும் பகலும் தொல்லையாப் போச்சி

வசனம் :— ஆனால் இந்த வாட்டி —
கள்ள மார்க்கெட்காரங்க வந்தா—யோசிக்காம
கழுத்தைப் பிடிச்சி வெளியே தள்ளோணும்
உள்ளபடிக்கு நல்ல மனிசனை—பார்த்து நம்ப
ஓட்டைக் கொடுத்து நாட்டைக் காக்கணும்

பாட்டு 3] பாட்டு [கமலா

**Be Happy, Be Cheerful, Be Jolly! (Be Happy)**

இன்பக் கனவாம் வையகமே—இதில்
என்றும் இனிதாய் மகிழ்ந்திடலாம்
அன்பெனும் சுடரே வழி காட்டும்
அதன் அற்புத சக்தி உயிரூட்டும் ... ... ... (Be Happy)
சென்றதை எல்லாம் எண்ணாமல் தீவிர சிந்தனை பண்ணாமல்
இன்று முதல் புது வாழ்வினிலே
இனிதாய் மனமே மகிழ்வீர் ... ... ... (Be Happy)

உயர்வாகிய செம்பொன்னுமே—தினம்
மெருகில்லாவிடில் மின்னுமோ அயர்வாகும் மனவிசாரம்
அதற்கு அடிமையாவதோ வீரம் ... ... ... (Be Happy)

(வசனம்)

விஜயன் இதோ பாரும் சோப்பு, சீப்பு, ஸ்னோ, பேஸ் பவுடர்,
சேப்டி ரேஸர், ஷேவிங் ஸ்டிக், டாம்கோ ஆயில், டாய்லெட்
எல்லாம் உங்களுக்குத் தான்! [ஸெட்,
ஷோல்டர் பதினாறு...பாடி சுற்றளவு, முப்பத்தாறு! ...
காலர் பதினெட்டு! நீளம் கரெக்ட், முப்பத்தெட்டு!... O K·
Thank Yo Mr· Vijayan! .... .... ....

(பாட்டு)

**Be Happy, Be Cheerful, Be Jolly!** (இன்பக்கனவாம்)
புன்னகை தவழும் முகமும் புதுமை நாடும் மனமும்
உன்னதமாகிய வாழ்விலே-மிக உயர்ந்த பண்பாகும்...ஆ...

(வசனம்)

மாப்பிள்ளை போலே ஷோக்காய் கிராப்பை
வாரிக்கொள்ள வேணும்...
மாடேர்ன் ஸ்டைலாய் பேன்ஸி டிரஸ்ஸும்
செய்து கொள்ள வேணும்—இதோ
அமெரிக்கன் புஷ்கோட், ஹாட்டு,
ஹாரே ஷர்டு, கிரேப் ஸோல் பூட்டு,

டீவீடு ஸூட்டு, டேட்டால் டைஸ்.
டர்க்கி டவல்ஸ், ஹாண்ட் கர்சீப்ஸ்!
All for you .... .... Take it .... ...

(பாட்டு)

Ba Heppy, Be Cheerfull, Be Jolly! (இன்ப)

நேர்மை அழியாது ... பொய் நெடுநாள் வாழாது
சீர்தரு மதியின் ஒளியை. முகில்
சென்று மறைப்பதும் உண்டு—இதை
தினமும் நேரில் கண்டும்—பழி வந்ததே என எந்த நேரமும்
சிந்தனை செய்வதனாலே பலன் தந்திடுமோ கை மேலே
அதனாலே. இனிமேலே,

Be Happy, Be Cheerful, Be Jolly! (இன்ப)

பாட்டு 4] கோரஸ் [காலேஜ் டான்ஸ்

அறிவு பெருகவே ஆணு பெண்ணும்
சரி சமமாகப் பழகணும்—கல்வி
இருவரும் ஒன்றாய்ப் பகழணும்—
அறியாமை எனும் இருள் நீங்கி—உலக
அனுபவம் உண்டாகணும் (உலக அனுபவம்)

சிறு வயது முதல் இருவரும் ஒன்றாய்
சேர்ந்து படிப்பது நலமே—மனம்
தெளிவுறும் மடமை விலகிடும்—செம்மை
சேர வாழும் பெண் குலமே (அறிவு)

(வசனம்)

மனைவி: ஆனந்தமாக காலேஜ் மாணவர் போகிற அழகைப் பாருங்க
அந்த மாதிரி நம் வனஜாவையும்
காலேஜுக்கு அனுப்பவேணுங்க ... ... என்னுங்க

புருஷன்: சரி சரி! எல்லாம் வீட்டுக்குப் போய் பேசலாம்

மனைவி: வனஜாவை காலேஜுக்கு அனுப்பணு
மிண்ணத்துக்கு வீட்டுக்குப் போய் பேசலா மிண்ணீங்களே!

பாட்டு

புரு: ஆமாம்! காலேஜு படிப்பெதுக்கு—தாலி
கட்டி கிட்டு வாழப் போற பெண்ணுக்கு: சும்மா (காலே)

மனைவி: நல்லாயிருக்கே! கல்யாணம் செய்து கொள்வதானால்—
காலேஜில் படிக்கக்கூடாதா? ... (கல்) [பெண்கள்

புரு: கூடாது அதிகமாகப் படிச்சா—வீட்டுக்கு
அடங்கிப் பேசமாட்டா—கணவனுக்கு
வணங்கி நடக்கமாட்டா—எப்போதும்
அலங்காரம் பண்ணிக்கிட்டு ஊரைச் சுத்தி வரும்
ஆசையை விடமாட்டா—சமையல்
பானையைத் தொடமாட்டா ... ... அதுமட்டுமல்ல ... ...

மனைவி: இன்னும் என்ன?

புரு: நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு
நாலும் உள்ளது பெண்மை—இந்த
நாலும் உள்ளது பெண்மை—அது
ஆணோடு சேர்ந்து படித்தால் எல்லாம்
அழிந்து போவது உண்மை—அதனால்
ஆகுமோ சொல்லு நன்மை?

(வசனம்)

மனைவி: சரிதான்! இவ்வளவுதான் நீங்க தெரிஞ்சிகிட்டது.

(பாட்டு)

இளமையிலிருந்தே ஆணும் பெண்ணும்
இணக்கமாக வாழ்ந்தாலே இல்லறம்
சிறக்கும் அனுபவத்தாலே

வசனம்

இல்லாவிட்டால் எப்படியிருக்கும் தெரியுமா?
புருஷன் வீட்டுக்குப் போய், ஒரு
குழந்தைக்குத் தாயான பிறகு கூட,
யாராவது இரண்டு பேர்
புருஷனைப் பார்க்க வீட்டுக்கு வந்தால் ... ...

ஆண் 1: மிஸ்டர் சீனு இருக்கிறாரா?

ஆண் 2: அப்பா எங்கே பாப்பா?

பெண்: ஆபீஸிலே யின்னு சொல்லு பாப்பா!

ஆண் 2: எப்போ வருவார் பாப்பா?

பெண்: எனக்குத் தெரியாதின்னு சொல்லு பாப்பா

ஆண் 2: அப்போ நாங்க போய் வாரோம்
உங்க அப்பா வந்ததும் சொல்லு பாப்பா!

பெண்: பேரைக் கேளு பாப்பா!

ஆண் 2: பேரா... ரொம்ப பெரிய மனுஷாரின்னு
சொல்லு பாப்பா...

பெண்: ஐய்யய்யோ...திருடன்...திருடன்!

மனைவி: இப்படித்தான் நடக்கும்

புரு- ஆனால் காலேஜில் படித்து மேனாட்டு முறையைக்
கையாளும் நாகரீகப் பெண்ணை
கல்யாணம் செய்துக் கொண்டவன் படும்
கஷ்டத்திற்கு எது எல்லை...?

மனைவி: என்னவாம்...?

புரு: என்னவா...? காற்றுவாங்க தினம் பீச்சுக்குப் போக
காரு வாங்கித்தரணும்...ஜவுளிக் கடைக்கும் ஷாப்புக்கும்
கொடுக்க பேங்கில் பணம் தாராளமாக வேணும்
இப்படி யெல்லாம் செய்தாலும்...அவ மாதர்கள்
சங்கம் லேடீஸ் கிளப்பு மனசுக்கு பிடிச்ச டிராமா சினிமா
இந்த மாதிரி உல்லசமா பொழுது போக்குவாளே ஒழிய
வீட்டை கவனிக்க மாட்டா...புருஷன் கதி
என்ன ஆகும் தெரியுமா...?

பெண்: லல்லால லல...லலல...
அஹஹாஹ...ஹ...ஹ...ஹ...ஹ...ஹ

ஆண்: எங்கே போறீங்க...?

**ஆண்: Please excuse me...**

பெண்: Today tennis final match

அதனால் சீக்கிரம் போகணும் நீங்க ஜாலம் பண்ணிக் கிட்டு
சும்மா காலம் போக்காமெ சமயல் 'குயிக்கா' செய்யணும்
பாய்லரை விளக்கி வெந்நீர் போட்டு பக்குவமாக
வைக்கணும் பாத்ரூமிலே சேலை ஜாக்கட்
சோப்பும் எடுத்து வைக்கணும் பசிக்கிற சமயம் பாத்து—
குழந்தைக்குப் பாலும் கொடுக்க வேணும்...

ஆண்: ஆ...நானா...?

பெண்: ஆமாம்...அதோ பால் புட்டி!

ஆண் 2: Good evening, Girija!

பெண்: Hallo, Come on, Mr. Raja!
சொன்னது ஞாபகம் இருக்குதா
கொஞ்சம் சுருக்கா வேலையைப் பாருங்க நான் போகட்டுமா

ஆண்: சரி...ஆகட்டுங்க

பெண்: Thank you!

புரு: புரிஞ்சுதா...
இந்த மாதிரிக் குடித்தனம் செய்தால் வீடு உருப்படுமா?...
நம்ம நாட்டுப் பண்புக்கிது சரிப்படுமா?

மனைவி: இது காலேஜில் படித்ததனுலே உண்டானதல்ல
வீண் கர்வத்தினுலே தானுக விளையும் தொல்லை நானில்லே
உங்களைவிட நல்லா படிச்சி பாஸ் செய்தேனே,
இப்போ உங்க கிட்டே அடங்கி நடக்கலையா...

புரு: நீ படிச்சு இப்போ என்ன ஆச்சு?
மனைவி: உங்க குணம் தெரிஞ்சி நடந்துக்க உபயோகமாச்சு...
புரு: இல்லேண்ணு...?
மனைவி- உங்களைப் போல தற்குறி கிட்டேயிருந்து
ஒரு நிமிஷம் குடித்தனம் செய்ய முடியுமா...?

புரு- சரிதான்...
மனைவி- இவ்வளவு எடுத்து சொல்ல முடியுமா...?

புரு- சரிதான்...
மனைவி- அதனுலே, படிக்கிறது நல்லதில்லையா?...

புரு: சரிதான்....
மனைவி: என்ன எல்லாத்துக்கும் சரிதான்
புரு: ஆமாம்

பாட்டு

புரு: சரி, சரி! உன் மனசு போலே நடக்கட்டும்
குழந்தை படிக்கட்டும்! ஆனல் என்
சங்கதி மட்டும் ரகஸியமாயிருக்கட்டும்!

வசனம்

மனைவி: அது என்னுங்க?...
புரு: நான் தற்குறிங்கிற விஷயம்!....
மனைவி: அஹ்ஹ.... அதுவா....?

பாட்டு

கோரஸ்: அறிவு பெருகவே ஆணும் பெண்ணும்
சரி சமமாகப் பழகணும்—கல்வி
இருவரும் ஒன்ருய்ப் பழகணும்....
அறியாமை எனும் இருள் நீங்கி உலக
அநுபவம் உண்டாகணும் .... .... உலக
அநுபவம் உண்டாகணும்

பாட்டு 5] [ரேவதி

மின்னலைப் போலே என் காதல் வானில்
விஜயன் ஒரு நாள் வந்தார் .... .... ....; [மின்னல்
மென்மையான என் மனதில் துன்பமே நிலைபெறச் செய்து
மின்னலாக மறைந்தார்....மீண்டும் மின்னலாக மறைந்தார்
உண்மையும் அன்பும் நிறைந்த உத்தமரே என்னுயிரின்
உகந்த துணையானார்....என்றே மகிழ்ந்திடும் போதினிலே....
அவர் இன்னொரு பெண் தன் வசமானால்
என் வாழ்விலே சுகமேது?....உலகில்
இருந்தும் லாபமேது? ... ... [மின்னலை]
என்னை அவர்க்கீந்தேன்....அவர்
தன்னை எனக்குத் தருமுன்னே....நான் [என்னை]
என் எண்ணமெல்லாம் மண்ணாச்சே!
கிளி இலவு காத்த கதையாச்சே! [மின்னல்]
காதல் களிப்பிழந்தே....இளமையில்
காணும் நலமிழந்தேன்....எனினும்
"காதலர் சுகமுறவே...காதலைத்
தியாகம் செய்தோம்" என் மகிழ்ந்தே[மின்னலை]

பாட்டு 6] [கமலா

பேதைப் பெண் மதியாலே...மன
வேதை தான் இந்நாளே ... .... [பேதை]
கொலைபாதகன் செயலாலே....நல
மேது வாழ்வினிலே....இனிமேலே .... ....
ஆசையாகப் பேசும்...பகல் வேஷக்காரன் மோசம்....
அறியாமல் கொண்டேன் நேசம் அதனால் இழந்தே
சொல்லிலே அமுதூறும்....அவர் [சந்தோஷம்
உள்ளமோ விஷம் சேரும் அற்ப
புல்லர்கள் வாழும் ஞாலம்...இதில்
நல்லவர்க் கேது காலம்?...ஏது காலம்?
கனவிலே கண்ட காக்ஷி....போல் என்
காதலின் நிலையாச்சே....நிலையாச்சே [கன]
மனதில் வரைந்த மகிழ்ச்சி ஓவியம் மறு
கணத்தில் மறைந்து போச்சே...பாழாச்சே(பேதை

## —: நடிக நடிகைகள். :—

| | |
|---|---|
| எஸ். பாலசந்தர் | விஜயன் |
| எஸ். ஏ. நடராஜன் | விஜய சாரதி |
| ஜி. எம். பஷீர் | வக்கீல் ராமன் |
| எம். கே. முஸ்தபா | இன்ஸ்பெக்டர் கேசவன் |
| ஜி. முத்துகிருஷ்ணன் | சேகர் |
| எம். ஆர். சந்தானம் | கருணாகரர் |
| ஏ. கணேஷ்சிங் | பாண்டு |
| டி. எம். கோபால் | ஆறுமுகம் |
| கே. என். வெங்கட்ராமன் | பப்ளிக் பிராஸிக்யூடர் |
| எஸ். பீர்முஹம்மத் | ,, ,, |
| எஸ். வி. ராஜகோபால் | வண்டிக்காரன் |
| பின்னி ராஜு | ஜட்ஜ் |
| மாஸ்டர் சிவராம், கிருஷ்ணன், பிரபாகரன் | |
| எஸ். ரேவதி | கமலா |
| வி. மீனாக்ஷி | ரேவதி |
| ஆர். மாலதி | ஜெயம் |
| எஸ். சரோஜா | சீதம்மா |

மற்றும் ஜூபிடரின் நடிக நடிகைகள்.

கதை: எஸ். பாலசந்தர்

வசனம்: டி. எஸ். வெங்கடசாமி, கலைமணி
என். சீதாராமன் B. A. (Hons.), B. L.

பாட்டுகள்: கே. டி. சந்தானம்

சங்கீதம்: பாலசந்தர்

தயாரிப்பு: எம். சோமசுந்தரம்.

டைரக்ஷன்: எஸ். பாலசந்தர்

டியோ: தி சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்,
லெஸ்ஸீஸ்: ஜூபிடர் பிக்சர்ஸ்.

பாளர்: கே. அய்யாசாமி. நேதாஜி ரோடு. மதராஸ்.